# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை – 2020**
**General Certificate of Education (Ord.Level) Model Exam - 2020**

| நேரம்: 2 மணித்தியாலங்கள் | தமிழ்மொழியும் இலக்கியமும் - III | பாட எண் : 22 T III |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................

**கவனிக்க:**

* அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1. **சுருக்கமான விடை தருக.**

I. "உப்பிலாக்கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்
தப்பிய கந்தை பீதாம்பரம் போல்............."

அ) இங்கு அறுசுவை உணவாகக் கருதப்படுவது எது?
ஆ) 'தப்பிய கந்தை' என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

II. "சத்யஜித்ரே பதேர் பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை சில மயங்கித் தெளிதல்கள் மூலம் உணர்த்துகிறார்"

அ) **பதேர் பாஞ்சாலி** என்பது எவ்வகைக் கலை வடிவம்?
ஆ) **மயங்கித் தெளிதல்** என்றால் என்ன?

III. "கலியுக அரிச்சந்திரனாக மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை நடத்தினார் அவருக்குச் சத்தியமே பெரிது"

அ) காந்தியடிகளைக் கலியுக அரிச்சந்திரன் எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
ஆ) காந்தியடிகள் வாழ்வின் இலட்சியமாக எதனைக் குறிப்பிடுகிறார்?

IV. "படரெலாம் படைத்தாளைப் பழி வளர்க்கும் செவிலியை .........."

அ) இப்பாடலடி எவ்விலக்கியத்தில் இடம் பெறுகிறது?
ஆ) **செவிலி** எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

V. "பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு........."

அ) பிறகு என்ற சொல்லினூடாக ஆசிரியர் கூற விளைவது என்ன?
ஆ) **பிரசண்ட மாருதம்** என்பதன் பொருள் யாது?

VI. "குணக்குன்றாய் உழைத்துண்ணும் குல விளக்காம் மனிதன்"

அ) இக்கவிதை அடியின் சொந்தக்காரன் யார்?
ஆ) **குணக்குன்று** என்பது எவ்வகை அணி?

VII. "பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே"

அ) கேண்மை, செறிந்தன என்பவற்றின் பொருளினைத் தருக.
ஆ) வளைகள் செறிந்தமைக்கான காரணம் யாது?

VIII. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது தமிழர் பண்பாட்டின் அரிய கோட்பாடு"

அ) 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதன் மூலம் வெளிப்படும் உயர் பண்பு யாது?
ஆ) இங்கு வையகம் என்பது குறிப்பாக எதனைக் குறிக்கிறது?

IX. “அரவு உயர்த்தோன் கொடுமையினும் முரசு உயர்த்தோய்”

அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

ஆ) ‘அரவு உயர்த்தோன்’ எனப்படுபவன் யார்?

X. “அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்

எந்தையுமுடையோம் எம்குன்றும் பிறர் கொளார்”

அ) இப்பாடலைப் பாடியவர் யார்?

ஆ) **எம்குன்று** என்பதில் குறிப்பிடப்படும் குன்று யாது? (20 புள்ளிகள்)

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

I. பங்கப்பழனத்துழு முழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட்டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண்டெறியும் தமிழ் நாடா
கொங்கர்க் கமராபதி யளித்த
கோவே யிராச குல திலகா
வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

அ) இப்பாடலில் நாட்டு வளம் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?

ஆ) அரசனின் வீரம் சிறப்பிக்கப்படுமாற்றினை எடுத்துரைக்க.

II. அறந்தானே என்கின்ற அயல் நின்றாள் தனை
நோக்கி “ஐய அன்பின்
நிறைந்தாளை உரை என்ன நெறி திறம்பாத்
தன் மெய்யை நிற்பதாக்கி
இறந்தான் தன் இளந்தேவி யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்னைப் பிரியாதான் தனைப்
பயந்த பெரியாள்” என்றான்.

அ) இங்கு தசரதன் பெருமை எவ்விதம் எடுத்துக்காட்டப்படுகின்றது?

ஆ) பெரியாள் என சுமித்திரை போற்றப்படக் காரணம் யாது?

III. தென்றலிலே அசைந்தாடும் செந்நெல் வயற்கதிர்கள்
தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை
குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்
குலக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்
முன்றலிலே மண்ணளைந்து முழங்காலில் தவழ்ந்து
முத்துதிர நகை செய்யும் சொத்தாகும் மழலை
கன்றினது உடல் நக்கி கனைக்கின்ற பசுக்கள்
கரைந்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்

அ) மனிதனின் உழைப்பின் மேன்மை எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது?

ஆ) இப்பாடலில் இடம்பெறும் அணிச்சிறப்புக்களை விளக்குக.

IV. தயிர்ச்சட்டியின் வடிவத்தில் வானில் கிடந்தது நிலா. கொட்டி வைத்த இடத்தில் சற்று நேரம் இசகாமல் பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத் தயிரைப்போல ஆடாமல் இருந்தது. அதன் வடிவம் வெண்ணிற மேகங்கள் நிலவை மூடிமூடி ஆலிங்கனம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு.

அ) நிலவின் அழகு எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?

ஆ) இங்கு இடம்பெறும் உவமைச்சிறப்பை விளக்குக.

V. சமணரும் பௌத்தரும் இசைக்கலை, நடனக்கலை போன்ற கலைகளை வெறுத்தாராயினும் இளங்கோ அடிகள் திருத்தக்கதேவர் போன்றோர் தமிழ் கலைகளை நன்கு விரித்துக் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவர் சமணராக இருந்திருப்பார் என்ற கூற்றுக்கு அவருடைய காமத்துப்பாலும் இல்லறத்தைப் போற்றும் முறையும் முரண்பாடாக இருக்கின்றன. நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணிக்கு உரையெழுதியது போல சமணர் எனப்படும் இளம்பூரணர் அகத்திணையியலுக்கும் உரையெழுதினார்.

அ) திருவள்ளுவர் சமணரல்லர் என்பதற்கான ஆதாரம் யாது?

ஆ) இங்கு குறிப்பிடப்படும் உரையாசிரியர்கள், உரைநூல்களைத் தருக.

(20 புள்ளிகள்)

3. **நீதி நூல்களான**

அ) விவேக சிந்தாமணியில் அறிவுடையாரின் இயல்பு பற்றியும்

ஆ) வாக்குண்டாமில் அடக்கமுடையாரின் இயல்பு பற்றியும்

கூறப்பட்டுள்ளவற்றை விளக்குக.

**அல்லது**

**கிருஸ்ணன்தூதுச் சருக்கத்தில்**

அ) அறத்தின் மீதான தருமனது நம்பிக்கை

ஆ) போர் மீதான வீமனது ஈடுபாடு

என்பன புலப்படுமாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

4. **பேதைமை** அதிகாரத்தில்

அ) பேதையரின் இயல்புகள்

ஆ) பேதைமையின் விளைவுகள்

என்பன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

**கம்பியூட்டர்** சிறுகதையில்

அ) எழுத்தாளரையும் அவரது குடும்பத்தினரையும் கம்பியூட்டர் அந்நியோன்னியம் ஆக்கிய விதம்

ஆ) நகைச்சுவை உணர்வு

என்பன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

5. **எது நல்ல சினிமா** பாடற்பகுதியில்

அ) நாடகத்திற்கும் சினிமாவிற்கும் இடையிலான வேறுபாடு

ஆ) நல்ல சினிமாவின் பண்புகள்

என்பன பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

6. **அற்றைத்திங்கள்** நாடகத்தில்

அ) உறவின் பலம்

ஆ) நாட்டின் வளம்

ஆகியன புலப்படுமாற்றினை விளக்குக. (10 புள்ளிகள்)

7. **தேயிலைத் தோட்டத்திலே** என்ற கவிதையில் மலையக மக்களின் வாழ்வின் துயரங்கள் புலப்படுமாற்றினை எடுத்து விளக்குக.

(10 புள்ளிகள்)